**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 50/2022**
**வழக்கு சாட்சி. ம.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | கனகராஜ் | | |
| **தந்தை பெயர்:** | பிச்சை | **தொழில்:** | வியாபாரம் |
| **கிராமம்:** | L.N.புரம், குப்புக்காலனி | **சமயம்:** | |
| **தாலுக்கா:** | அறந்தாங்கி | **வயது :** | 65/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of oaths Act, 1969 (Act 44 of 1969)**

**<u>18.07.2025</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கின் புகர்தாரராவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தினை சத்தியபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதனை ஏற்றுக்கொண்டு எனது தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்களை ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன். எனது தரப்பு சாட்சியத்தினை ஏற்று எதிரிக்கு தக்க தண்டனையும், எனக்கு இழப்பீடும் கிடைக்க உத்தரவிடுமாறு வேண்டுகிறேன்.

1. 16.12.2021 ஆம் தேதி வாதிக்கு எதிரி வழங்கியுள்ள ICICI Bank அறந்தாங்கி கிளையின் காசோலை( காசோலை எண்:029453) அசல் **ம.சா.ஆ.1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.
2. 16.12.2021 ஆம் தேதி அன்று எதிரி கொடுத்த காசோலையினை வாதி சேமிப்பு கணக்கு வைத்துள்ள அறந்தாங்கி, சிட்டி யூனியன் வங்கி கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்ததன் ரசீது **ம.சா.ஆ.2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.
3. 21.12.2021 ஆம் தேதி வாதி வசூலுக்கு செலுத்திய காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை (Return Memo) **ம.சா.ஆ.3 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.
4. 24.12.2021 ஆம் தேதி வாதி தரப்பில் எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **ம.சா.ஆ.4 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.
5. 24.12.2021 ஆம் தேதி வாதி தரப்பில் எதிரிக்கு அனுப்பபட்ட அறிவிப்பினை பதிவஞ்சலில் அனுப்பிதற்குரிய அஞ்சலக இரசீது - அசல் **ம.சா.ஆ.5 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.
6. 05.01.2022 ஆம் தேதி எதிரிக்கு, வாதி தரப்பு வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பு அடங்கிய பதிவு தபால் Unclaimed என்ற மேற்குறிப்புடன் திரும்ப வரப்பட்ட அஞ்சலக உறை - அசல் **ம.சா.ஆ.6 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்று எனக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன்.